(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW9 |
| Name | : | **திரு.பிரபாகரன்** |
| Father's Name | : | திரு.முருகையன் |
| Village | : | 63/1, Pilomia Nagar |
| Taluk | : | Thanjavur |
| Calling | : | Deeying Manager |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th September 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது தஞ்சாவூர், அண்ணா நகரில் குடியிருந்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். திருப்பூரில் 2002 முதல் 2004 ம் வருடம் வரை வேலை பார்த்து வந்தேன். திரு.முருகசாமி என்பவரை எனக்கு தெரியும். அவரிடம் நான் வேலை

பார்த்து வந்தேன். அவர் எனது Factory உரிமையாளர் ஆவார்.

2. போலிசாரிடம் நான் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. தேதி, மாதம் ஞாபகமில்லை, 2011 ம் ஆண்டு முருகசாமி என்பவர் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு EB அலுவலகத்தினை சேர்ந்த ஒரு நபரை கைது செய்திருப்பதை TV–ல் பார்க்கச் சொல்லி என்னிடம் சொன்னார். நானும் பார்த்தேன். அவரிடம் கேட்டபோது டி–கரிசங்குளத்தில் Factory–ல் உள்ள மின் இணைப்பு பெறுவதற்கு கேட்டும் கொடுக்காததால் லஞ்ச ஒழிப்பு போலிசாரிடம் சொன்னதாக சொன்னார்.

**சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரிய அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. Factory–ல் அ.சா.2 டம் பல வருடங்களாக நான் மேனேஜராக பணிபுரிந்தேன் என்றால் 2004 முதல் 2011 வரை பணிபுரிந்தேன். அந்த நிறுவனத்தில் மேலாளர் பொறுப்பில் பணிபுரிந்ததால் என் மீது நன்மதிப்பின் பேரில்தான் வேலைக்கு வைத்திருந்தார் என்றால் சரிதான். அ.சா.2 ஏதேனும் அரசு அலுவலகங்களுக்கு செல்லும் போது என்னை அழைத்துச் செல்வதுதான் வழக்கம் என்றால் இல்லை.

2. நானும் அ.சா.2–ம் டி–கரிசங்குளத்தில் புதிதாக Bleaching Company தொடங்கி வேலை நடந்துகொண்டிருந்தது சம்பந்தமாக அந்த Factory–க்கு Bleaching unit ஆரம்பிக்க மின் இணைப்பு வேண்டி உரிமையாளர் முருகசாமியுடன் சென்று மின் இணைப்பு பெறுவதற்கு மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல, நான் ஒருமுறை கூட அங்கு சென்றது கிடையாது. Deposit தொகை, பதிவு கட்டணம், மீட்டர் Deposit, development மற்றும் Service connection ஆகியவற்றிற்கு அ.சா,2 தொகை செலுத்திய விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. மின் இணைப்பு தராததினால் அந்த வருடம் தீபாவளி முதல் வாரத்தில் நானும், அ.சா2–ம் ஆஜர் எதிரியின் அலுவலகத்திற்கு சென்றதாகவும், அப்போது ரூ.10000/– முதலில் கொடுக்கும்படியும், transform போட்டு மின் கம்பி இழுத்து சீக்கிரம் வேலை முடித்து தருவதாக எதிரி எங்களிடம் கூறினார் என்றால் சரியல்ல.

3. 08.11.2011 ம் தேதி காலை 10.00 மணியளவில் அ.சா.2 டன் எதிரியின் EB அலுவலகத்திற்கு சென்றபோது எதிரி ரூ.10000/– என்ன ஆயிற்று என்று அ.சா.2–டம் கேட்ட போது அன்றைய தினம் பணம் எடுத்துவரவில்லை என்றும் மறுநாள் கொடுப்பதாக அ.சா.2 சொன்ன விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இந்த விபரங்கள் எல்லாம்

தெரிந்த காரணத்தினால்தான் எங்களிடம் மேற்கண்ட லஞ்சப்பணம் கேட்ட எதிரியை லஞ்சஒழிப்பு போலிசார் கைது செய்யும் விபரத்தினை அ.சா.2 TV–ல் பார்க்குமாறு என்னிடம் கூறினார் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக பொய்யாக எதிரியை காப்பாற்றும் நோக்கில் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. முருகசாமி என்பவர் லஞ்ச ஒழிப்பு போலிசாரிடம் கொடுத்த புகாரில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள K.K.செந்தில்குமார் என்பவர் யார் என்றால் அவர் முருகசாமியின் நண்பர் ஆவார். முருகசாமி சம்பந்தப்பட்ட எந்த ஆவணத்திலும் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். செந்தில்குமார் யார் அவர் எங்கு உள்ளார் என்றால் அவர் முருகசாமியின் நண்பர், ஈரோட்டில் வசித்து வருகிறார். முருகசாமி Coompany–க்கு வரும்போது செந்தில்குமாரும் உடன் வருவார், பின்பு இருவரும் ஒன்றாகவே திரும்ப செல்வார்கள்.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.09.18 17:11:33 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.